சிறப்பு சார்பு நீதிமன்றம், எண் –2 , ஜெயங்கொண்டம்
OS. No 249 of 2020

2024–ம் ஆண்டு மார்ச் 20–ம் நாள்(1969–ம் ஆண்டு 54–வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன் கிரேடு II பெஞ்ச் கிளார்க் அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

பெயர்– சிவராமன் தொழில்– சுயதொழில்

த/பெ– ராமலிங்கம் வட்டம்–முஸ்னம்

கிராமம் – சாத்தாவட்டம் வயது–35

முதல் விசாரணை வா.சா. 1

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியம்அளிக்கிறேன். என்தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்கு பதிலாக எழுத்துமூல நிரூபணவாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும். அது உண்மை, என்தரப்பில்

1. 05.03.2018 ம் தேதியன்று 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த போக்கிய பத்திரம் அசல் பதிவு செய்யப்படதாதது **வா.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 11.07.2019ம் தேதியன்று நான் எனது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி அங்கு இல்லை என்பதால் திருப்பப்பட்டதற்கான பிரிக்கப்படாத அஞ்சல் உறை **வா.சா. ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கினங்க குறுக்கு விசாரனை ஒத்திவைக்கப்படுகிறது

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ஒப்பம்/
சார்பு நீதிபதி,
ஜெயங்கொண்டம்.